முற்பகல் 11–25

(ஆ) உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக பட்டாசு தொழில் பாதிக்கப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து உச்ச நீதிமன்றம் அளித்திருக்கக்கூடிய பல்வேறு நிபந்தனைகளின் காரணமாக தமிழகத்திலே குறிப்பாக சிவகாசி பகுதியில் பட்டாசு தொழில் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகி இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. சிவகாசி பகுதியில் மட்டும் ஏறத்தாழ 1,070 பட்டாசு தொழிற்சாலைகள் கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் தேதி முதல் முழுமையாக மூடப்பட்டு, பட்டாசு மற்றும் பட்டாசை சார்ந்திருக்கக்கூடிய தொழிலை நம்பியிருக்கக்கூடிய ஏறத்தாழ 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களுடைய குடும்பங்கள் தங்களுடைய வாழ்வாதாரங்களை இழந்திருக்கக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.*

இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கு முக்கியமாக 4 காரணங்கள் இருக்கின்றன. அதில் மிக முக்கியமான காரணம், பட்டாசு தொழிலில் 'பசுமை பட்டாசுகள்' என்ற பட்டாசு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை. 'பசுமை பட்டாசு' என்றால், அது என்ன என்றே யாருக்கும் தெரியாது. பசுமை பட்டாசு என்ற ஒன்று இந்த உலகத்திலே எங்கும் இல்லை. எந்தச் சட்ட விதிகளிலும் குறிப்பிடப்படவில்லை. பசுமை பட்டாசு என்ற ஒன்றை தயாரிக்க வேண்டும் என்கின்ற உச்ச நீதிமன்றத்தின் நிபந்தனை, இந்தத் தொழிலை முற்றிலுமாக இன்றைக்கு முடக்கிப்போட்டிருக்கிறது. இன்னொன்று, மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனங்களாக இருக்கக்கூடிய CSIR, NEERI *ஆகியவை கொடுத்திருக்கக்கூடிய பரிந்துரைகள், ஆய்வுக்கூடத்தில் செய்வதற்கு வேண்டுமானால் சரியாக இருக்குமேதவிர, தொழிற்சாலையிலே அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய* chemical composition *அடிப்படையில் செய்வது பெரிய விபத்துகளை உண்டாகும். எனவே, பசுமை பட்டாசு என்றால் என்ன என்றே தெரியாத நிலையில், அதைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்வது 'இல்லாத பூனையை இருட்டறையில் தேடுவதற்கு சமானமாக அமைந்துவிடும்' என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.*

2019 ஜனவரி 7] [திரு. தங்கம் தென்னரசு]

அடுத்து மிக முக்கியமானது Barium Nitrate. Barium Nitrate–*ஐப் பயன்படுத்தினால் தான் பட்டாசுகளில் ஒளி* (light) *வரும். வானத்தில் வரக்கூடிய மத்தாப்புகளாக இருந்தாலும், கீழே உபயோகப்படுத்தக்கூடிய மத்தாப்பு வகைகளுக்கும்* Barium Nitrate *தேவை. அது முழுமையாக இப்போது தடை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது* Barium Nitrate–*ஐத் தடை செய்துவிட்டு பசுமை பட்டாசுகளை மட்டும்தான் நீங்கள் தயாரிக்க வேண்டும், இல்லையென்றால் உங்களுடைய தொழிற்சாலையின்* license–*ஐ இரத்து செய்யவேண்டிய நிலை வரும் என்கின்றபோது மிகப் பெரிய பாதிப்புக்கு இந்தத் தொழில் உள்ளாகியிருக்கிறது. எனவே, அரசாங்கம் அதனை உடனடியாகக் கருத்தில்கொண்டு, பசுமை பட்டாசு என்றால் என்ன என்பதை* define *செய்யக்கூடிய, வரையறுக்கக்கூடிய காலகட்டம் வரையிலாவது* Barium Nitrate–*ஐ உபயோகப்படுத்துவதற்கான விதிவிலக்கினை பெற்றுத் தந்து, இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மூன்றாவது சரவெடி உபயோகப்படுத்தக் கூடாது. ஒளி உருவாக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்* zero hour–*ல் உங்களை தகவல் கோரல் என்ற முறையில்தான் பேசச் சொன்னேன். (குறுக்கீடு)*

திரு. தங்கம் தென்னரசு: *முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான் இதோடு முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு)*

திரு. தங்கம் தென்னரசு: *இந்த வெடியைப் பற்றி மட்டும் பேசி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் விளக்கமாகப் பேசினீர்கள் என்றால், பிறகு நிறைய பேருக்கு வாய்ப்புத் தர முடியாது.*

திரு. தங்கம் தென்னரசு: *ஆக, நான் கேட்டுக்கொள்வது, இந்த இரண்டே குறிப்புதான். இந்தப் பிரச்சினைக்கு இவைதான் காரணம். நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் இதற்கு சீராய்வு மனு செய்து, இந்த நிபந்தனைகளுக்கு உச்ச நீதிமன்றத்தில் முழு விலக்கினை உடனடியாகப் பெற்று, இந்தத் தொழிலில் இருக்கக்கூடியவர்களுடைய வாழ்வாதாரங்களை,*

தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும். இன்னொன்று, இதற்கு நிரந்தரமான தீர்வு வர வேண்டுமென்று சொன்னால், exceptional event என்பதின்கீழ் பட்டாசு தொழிலைக் கொண்டுவந்து தனித்தன்மை நிகழ்வாகக் கருதி, விதி எண் 3(b)–யிலிருந்து பட்டாசு தொழிலுக்கு நிரந்தரமான ஒரு விலக்கினைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்து, பட்டாசு தொழிலைக் காப்பாற்ற வேண்டும். பட்டாசு தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களின் வாழ்வாதாரங்களைக் காப்பாற்ற வேண்டும். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில், கடந்த 22 ஆம் தேதி எல்லா கட்சிக்காரர்களும் சேர்ந்து 2 இலட்சம் பேர் பேரணியாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறோம். எனவே, அரசாங்கம் இதை மிக உன்னிப்பாக எடுத்துக்கொண்டு இந்தத் தொழிலைக் காப்பாற்றக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவினைப் போற்றி வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்வழியில் நல்லாட்சி செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 900–க்கும் மேற்பட்ட பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பட்டாசு உற்பத்தியில் சுமார் 70,000 தொழிலாளர்கள் நேரடியாகவும், பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை சார்ந்த தொழில்களில் பல இலட்சம் தொழிலாளர்கள் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் பட்டாசு தொழிலில் உள்ள இடர்பாடுகள் குறித்த அச்சத்தை சுட்டிக்காட்டி மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள W.P. 728/2015 எண்ணிட்ட பொது நல வழக்கின் காரணமாக, விருதுநகர் மாவட்டத்திலுள்ள அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளும்

மேற்படி W.P. 728/2015 எண்ணிட்ட வழக்கையும், அதனைச் சார்ந்து தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும், விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விரைவில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986 விதி 3(b)–க்குக்கீழ் விலக்களித்து, உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, மத்திய அரசு மற்றும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் கவனத்தினை ஈர்க்கும் விதமாக 26–12–2017 முதல் உற்பத்தியை நிறுத்தி, காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன.

முற்பகல் 11–30

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பட்டாசு தொழிலாளர்களின் நலன் காக்க, எப்பொழுதும் தொழிலாளர் நலன்மீது அக்கறை கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இப்பிரச்சினையின் அவசரம் மற்றும் அவசியத்தை உணர்ந்து சிறப்புக் கவனம் செலுத்தி, சட்டபூர்வமான நல்ல முடிவு எட்டப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என இப்பேரவையில் அறிவித்தது.

பட்டாசுத் தொழிற்சாலைகள் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்த காலவரையற்ற வேலைநிறுத்தம் 21–1–2018 அன்று விலக்கிக்கொள்ளப்பட்டது. மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள W.P. No. 728/2015 என்ற பொது நல வழக்கில் இப்பேரவையில் தெரிவித்த உறுதியின்படி, தமிழ்நாடு அரசும் ஒரு பிரதிவாதியாக தன்னை இணைத்துக் கொண்டது. பட்டாசு தொழில் நிறுவனங்களின் நலனைக் காக்கின்ற வகையில் அரசு விரிவான எதிர்வுரை ஆவணம் ஒன்றை (counter affidavit) தாக்கல் செய்துள்ளது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986, விதி எண் 3(b)–ன்கீழ் பட்டாசுக்கு விலக்களிக்கவும், இப்பொருள் குறித்து உரிய நடவடிக்கை கோரியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 17–1–2018 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாண்புமிகு நாடாளுமன்ற துணை சபாநாயகர் அண்ணன் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் தலைமையில், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நான்,

[திரு. பா. பென்ஜமின்] [2019 ஜனவரி 7

விருதுநகர் மாவட்ட அமைச்சரான மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், இத்துறையின் அரசுச் செயலாளர் மற்றும் பட்டாசு ஆலை உரிமையாளர்கள் சங்கத்தினர் உள்ளிட்டோர் அடங்கிய குழுவுடன் மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களை கடந்த 7–2–2018 அன்று புதுடெல்லியில் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டிலுள்ள பட்டாசு தொழிற்சாலைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை மனுவினை அளித்தோம். மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்கள்.

தமிழ்நாட்டில் பட்டாசு தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் உறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில், அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் வாயிலாக உச்ச நீதிமன்றத்தில் தெளிவான மற்றும் வலுவான வாதங்கள் எடுத்துரைக்கப்பட்டதன் விளைவாக, 2018 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு 2 மணி நேரம் வரை பட்டாசுகள் வெடிக்கலாம் என்பது உள்ளிட்ட ஒரு சில கட்டுப்பாடுகளுடன் பட்டாசு வெடிப்பதற்கான தடையை விலக்கி, 23–10–2018 அன்று மாண்பமை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மாண்பமை உச்ச நீதிமன்றம் 23–10–2018 ஆம் நாளிட்ட தனது ஆணையில், வழக்கமான பட்டாசுகளைத் தயாரிப்பதற்கும், சர வெடிகளைத் தயாரிப்பதற்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, பட்டாசைத் தயாரிப்பதற்குத் தேவையான Barium Nitrate–ஐப் பயன்படுத்துவதற்கும் தடை விதித்தது. மேலும், பசுமை பட்டாசுகள் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிட்டது.

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் இவ்வாணைகள் பட்டாசு தொழிலுக்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என நமது மாநில ஒட்டுமொத்த பட்டாசு உற்பத்தியாளர்களும் அச்சம் கொள்கின்றனர். மேலும், இப்பொருள் குறித்த வழக்கு 11–12–2018 அன்று விசாரணைக்கு வந்தபோது, பசுமை பட்டாசுகள் தயாரிப்பது குறித்த வழிமுறைகளை Petroleum and Explosives Safety Organisation, PESO என்ற அமைப்பு உருவாக்க வேண்டுமென்று ஆணையிட்டு, அடுத்த விசாரணையை, வரும் 22–1–2019 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து மாண்பமை உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் W.P. No.728/2015 என்ற எண்ணிட்ட பொது நல

2019 ஜனவரி 7] [திரு. பா. பென்ஜமின்]

வழக்கு மற்றும் அதனைச் சார்ந்து தொடரப்பட்ட வழக்குகளில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் 23–10–2018 ஆம் நாளிட்ட ஆணைகளின் தொடர்ச்சியாக, பட்டாசு தொழில் கடுமையாகப் பாதிக்குமென்ற காரணத்தின் அடிப்படையில், விருதுநகர் மாவட்டத்திலுள்ள பட்டாசு உற்பத்தியாளர்கள் உற்பத்தியை நிறுத்தியதன் விளைவாக, அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் பட்டாசு தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நாட்டின் ஒட்டுமொத்த பட்டாசு உற்பத்தியில் கிட்டத்தட்ட 90 சதவிகிதத்திற்கும் மேலாக பட்டாசு உற்பத்தி செய்து வரும் நமது மாநில சிவகாசி பட்டாசு உற்பத்தியாளர்கள் நலனில் அக்கறை கொண்ட, தொழிலாளர்களின் அரணாகத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986, விதி 3(b)–ன்கீழ் பட்டாசுக்கு விலக்களிக்க வேண்டுமென்ற முக்கியக் கோரிக்கை குறித்து மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும். மேலும், கடந்த 4–1–2019 அன்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் இப்பொருள் குறித்து கேள்வி எழுப்பி பேசியபோது, அதற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள், இப்பேரவையில் இப்பொருள் குறித்து உறுதிபடத் தெரிவித்தவாறு, தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அரசு, சட்டப் போராட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் பட்டாசு தொழிலையும், பட்டாசு தொழிலைச் சார்ந்துள்ள அனைத்து தரப்பினரின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பான வகையில் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–35

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாசு பிரச்சினை பற்றியும், பட்டாசுத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் இன்றைக்கு எந்த அளவிற்குப்

பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் எடுத்துரைத்து, கடுமையான நிபந்தனைகளை விதித்து, அதுவும் உச்ச நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது என்ற நிலையில், அதற்குரிய சீராய்வு மனுவைத் தாக்கல் செய்யும் முயற்சியில் அரசு உடனடியாக ஈடுபட வேண்டுமென்று எங்கள் உறுப்பினர் ஒரு கோரிக்கையை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அதையொட்டி நான் கேட்க விரும்புவது, எப்படி தமிழர்களுடைய பண்பாட்டு விளையாட்டாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு பிரச்சினை வந்த நேரத்திலே சட்டமன்றத்திலே உடனடியாக ஓர் அவசர தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக நாம் அறிவுறுத்தியிருக்கிறோமோ, அதேபோல இந்தப் பிரச்சினையிலும்—அதாவது ஒரு விளையாட்டு, தமிழர்களுடைய கலை பண்பாட்டுத் துறையின் விளையாட்டு—இது வாழ்வாதாரப் பிரச்சினை, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து சட்டமன்றத்திலே அதற்குரிய தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் கேட்க விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, வேப்பனஹள்ளி, ஓசூர் தொகுதிகளில் யானைகளால் விவசாயப் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், சுருக்கமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, வேப்பனஹள்ளி, ஓசூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் கர்நாடக, ஆந்திர மாநில எல்லைப் பகுதிகளாக அமைந்துள்ளன. மூன்றில் ஒரு பங்கு வனப் பகுதியைக் கொண்ட இந்த மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் உள்ளன. ஆண்டுதோறும் கர்நாடக மாநிலம் பன்னெர்கட்டா வனப் பகுதியிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அருகேயுள்ள ஜவளகிரி வனப் பகுதிக்கு 200–க்கும் மேற்பட்ட யானைகள் வந்துவிடுகின்றன. நெல், ராகி, வாழை, கோஸ், தக்காளி ஆகியவற்றிற்கு அறுவடைக் காலம் என்பதால், பயிர்கள் நன்கு விளைந்த நிலையில், இப்பகுதிகளிலுள்ள விவசாயப் பயிர்களை*